சுராவின்

# தமிழ் உரைநூல்

## 6ஆம் வகுப்பு

முழு ஆண்டு கையேடு

முதல் பருவம் | இரண்டாம் பருவம் | மூன்றாம் பருவம்

SURA'S

### சிறப்பம்சங்கள்

- புதிய பாடநூலின்படி தயாரிக்கப்பட்டுள்ளது.
- பாடப்பகுதிகளிலுள்ள எல்லாப் பிரிவுகளுக்கும், விரிவான விளக்கங்களுடன் கூடிய விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- மதிப்பீடு, இலக்கணம், மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு, கற்பவை கற்றபின் பகுதிகளுக்கான விடைகள் மற்றும் கூடுதல் வினா விடைகள் ஆகியவை தரப்பட்டுள்ளன.
- மூன்று பருவங்களுக்குரிய அலகுத்தேர்வு வினாத்தாள்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
- முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பருவத் தொகுத்தறித் தேர்வு 2025–26 வினாத்தாள்கள் விடைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

For Orders Contact
80562 94222 / 81242 01000 / 81243 01000/96001 75757 / 98409 26027

© வெளியீட்டாளர்கள்

குறியீட்டு எண் : FY-6-T

எழுதி வழங்கியோர்

கி. லதா, M.A., B.Ed., M.Phil.,

இரா. ஜலஜா, M.A.(Tamil), M.A.(Journalism), B.Ed., D.El.Ed.

திருத்தம் செய்தவர்

வி.கே.செல்வராஜ், M.A., B.Ed.,



## Our Guides for Std VI & VII

TERMWISE GUIDES (for each Term for Tamil) & FULL YEAR GUIDES for 3 Terms together

- Sura's English Guide
- Sura's Maths Guide (EM & TM)
- Sura's Science Guide (EM &TM)
- Sura's Social Science Guide (EM & TM)
- Sura's 5-in-1 with all 5 Subjects in one guide (EM & TM)

## Our Guides for Std VIII to X

GUIDES

- சுராவின் தமிழ் உரைநூல்
- Sura's Smart English
- Sura's Mathematics Guide (EM & TM)
- Sura's Science Guide (EM & TM)
- Sura's Social Science Guide (EM & TM)


## பதிப்பாசிரியர் உரை...

எங்கள் வாழ்த்திற்குரிய

இனிய மாணவ செல்வங்களே!

உங்களை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும் வழிகாட்டி **'சுராவின் தமிழ் உரைநூல்'** ஆகும். புதிதாகத் திருத்தியமைக்கப்பட்ட பாடநூலின்படி உருவாக்கப்பட்டுள்ள **சுராவின் 6ஆம் வகுப்பு – தமிழ் உரைநூல் – முப்பருவ** வழிகாட்டியை உங்களிடம் சேர்ப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம்.

புதிய தேர்வுத்திட்டத்தின்படி, 6ஆம் வகுப்புத் தேர்வுகளில் நீங்கள் அதிக மதிப்பெண் பெறச் சரியான விடைகளுடன், எளிய முறையில் இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

இறையருளை வேண்டுகிறோம்.

நலமே விளைக!

– பதிப்பகத்தார்

சுபாஷ் ராஜ், B.E., M.S.,

(சுரா பதிப்பகம்)


தலைமை அலுவலகம்

சுரா பப்ளிகேஷன்ஸ்

1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை,

அண்ணா நகர், சென்னை-600 040.

**Phone :** 044 - 4862 9977, 044 - 4862 7755.

**E-mail :** orders@surabooks.com

**Website :** www.surabooks.com

**For Orders Contact**

80562 94222
81242 01000
81243 01000
96001 75757
98409 26027


8/04/2026

SURA'S

# பொருளடக்கம்

## முதல் பருவம்

# தமிழ்


| வ. எண் | பொருண்மை/ இயல் | பாடத் தலைப்புகள் | | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|---|---|
| மனப்பாடச் செய்யுள் (முதல் பருவம், இரண்டாம் பருவம். மூன்றாம் பருவம்) | | | | 1-3 | ஜுன் |
| நூல்களும் ஆசிரியர்களும் | | | | 5 | |
| 1. | மொழி **தமிழ்த்தேன்** | **கவிதைப்பேழை** | இன்பத்தமிழ் ✶ | 6 | |
| | | **உரைநடை உலகம்** | வளர்தமிழ் | 11 | |
| | | **விரிவானம்** | ஒளி பிறந்தது | 18 | |
| | | **கற்கண்டு** | தமிழ் எழுத்துகளின் வகையும் தொகையும் | 21 | |
| **அலகுத் தேர்வு -1** | | | | 30 | |
| 2. | இயற்கை **இயற்கை இன்பம்** | **கவிதைப்பேழை** | ஏதிலிக்குருவிகள் | 31 | ஜுலை |
| | | **உரைநடை உலகம்** | சிறகின் ஓசை | 35 | |
| | | **விரிவானம்** | கிழவனும் கடலும் | 40 | |
| | | **கற்கண்டு** | முதலெழுத்தும் சார்பெழுத்தும் | 43 | |
| | | **வாழ்வியல்** | திருக்குறள் ✶ | 50 | |
| **அலகுத் தேர்வு -2** | | | | 54 | |
| முதல் இடைத் தேர்வு - பாடப்பகுதி இயல் 1, 2 | | | | | |
| 3. | கல்வி **கண்ணெணத் தகும்** | **கவிதைப்பேழை** | கல்வியைப் போற்று ✶ | 55 | ஆகஸ்டு, செப்டம்பர் |
| | | | துன்பத்தை வெல்லும் கல்வி | 58 | |
| | | **உரைநடை உலகம்** | கல்விக்கண் திறந்தவர் | 62 | |
| | | **விரிவானம்** | நூலகம் நோக்கி... | 66 | |
| | | **கற்கண்டு** | மொழிமுதல் எழுத்துகள் | 68 | |
| **அலகுத் தேர்வு -3** | | | | 74 | |
| முதல் பருவத் தேர்வு - பாடப்பகுதி இயல் 1, 2, 3 | | | | | |


SURA'S

# பொருளடக்கம்

# இரண்டாம் பருவம்


| வ. எண் | பொருண்மை / இயல் | பாடத் தலைப்புகள் | | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|---|---|
| | | நூல்களும் ஆசிரியர்களும் | | 76 | அக்டோபர் |
| 1. | நாகரிகம், பண்பாடு<br>**பாடறிந்து ஒழுகுதல்** | **கவிதைப்பேழை** | ஆசாரக்கோவை | 77 | |
| | | | கண்மணியே கண்ணுறங்கு | 82 | |
| | | **உரைநடை உலகம்** | தமிழர் பெருவிழா | 85 | |
| | | **விரிவானம்** | அறிவுசால் ஔவையார் | 92 | |
| | | **கற்கண்டு** | மொழி இறுதி எழுத்துகள் | 94 | |
| | | **வாழ்வியல்** | திருக்குறள் ✶ | 100 | |
| | | **அலகுத் தேர்வு -1** | | 106 | |
| 2. | தொழில், வணிகம்<br>**கூடித் தொழில் செய்** | **கவிதைப்பேழை** | நானிலம் படைத்தவன் | 107 | நவம்பர், டிசம்பர் |
| | | | கடலோடு விளையாடு | 113 | |
| | | **உரைநடை உலகம்** | வளரும் வணிகம் | 118 | |
| | | **விரிவானம்** | உழைப்பே மூலதனம் | 121 | |
| | | **கற்கண்டு** | இன எழுத்துகள் | 125 | |
| | | **அலகுத் தேர்வு -2** | | 132 | |
| இரண்டாம் பருவத் தேர்வு - பாடப்பகுதி இயல் 1, 2 | | | | | |


SURA'S

# மூன்றாம் பருவம்

## பொருளடக்கம்


| வ. எண் | பொருண்மை/ இயல் | பாடத் தலைப்புகள் | | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|---|---|
| | நூல்களும் ஆசிரியர்களும் | | | 134 | ஜனவரி |
| 1. | நாடு, சமூகம், அரசு, நிருவாகம் **புதுமைகள் செய்யும் தேசமிது** | **கவிதைப்பேழை** | பாரதம் அன்றைய நாற்றங்கால் ✶ | 135 | |
| | | | பாஞ்சை வளம் | 141 | |
| | | **உரைநடை உலகம்** | தமிழ்நாட்டில் காந்தி | 146 | |
| | | **விரிவானம்** | வேலுநாச்சியார் | 151 | |
| | | **கற்கண்டு** | சுட்டு எழுத்துகள், வினா எழுத்துகள் | 153 | |
| | **அலகுத் தேர்வு -1** | | | 160 | |
| 2. | அறம், தத்துவம், சிந்தனை **எல்லாரும் இன்புற** | **கவிதைப்பேழை** | பராபரக் கண்ணி ✶ | 161 | பிப்ரவரி |
| | | **உரைநடை உலகம்** | நிலம் பொது | 165 | |
| | | **விரிவானம்** | பாதம் | 169 | |
| | | **கற்கண்டு** | நால்வகைச் சொற்கள் | 171 | |
| | | **வாழ்வியல்** | திருக்குறள் ✶ | 178 | மார்ச் |
| | **அலகுத் தேர்வு - 2** | | | 180 | |
| | மூன்றாம் இடைத் தேர்வு - பாடப்பகுதி இயல் 1, 2 | | | | |
| 3. | மனிதம், ஆளுமை **இன்னுயிர் காப்போம்** | **கவிதைப்பேழை** | ஆசிய ஜோதி | 181 | |
| | | | இளைய தோழனுக்கு ✶ | 187 | |
| | | **உரைநடை உலகம்** | மனிதநேயம் | 192 | |
| | | **விரிவானம்** | முடிவில் ஒரு தொடக்கம் | 196 | |
| | | **கற்கண்டு** | பெயர்ச்சொல் | 198 | |
| | **அலகுத் தேர்வு - 3** | | | 206 | |
| | மூன்றாம் பருவத் தேர்வு - பாடப்பகுதி இயல் 1, 2, 3 | | | | |
| | முதல் பருவம் - தொகுத்தறி மதிப்பீடு - 2025-26 வினாத்தாள் விடைகளுடன் | | | 207-210 | |
| | இரண்டாம் பருவம் - தொகுத்தறி மதிப்பீடு - 2025-26 வினாத்தாள் விடைகளுடன் | | | 211 - 214 | |
| | மூன்றாம் பருவம் - தொகுத்தறி மதிப்பீடு - 2025-26 வினாத்தாள் விடைகளுடன் | | | 215- 218 | |


(✶) இக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப் பகுதி

SURA'S

# TO ORDER WITH US

## SCHOOLS and TEACHERS:

We are grateful for your support and patronage to **'SURA PUBLICATIONS'**
Kindly prepare your order in your School letterhead and send it to us.
For Orders contact: 81242 01000 / 81243 01000

## DIRECT DEPOSIT

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **36550290536** |
| Bank Name | : | **STATE BANK OF INDIA** |
| Bank Branch | : | Padi |
| IFSC | : | SBIN0005083 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **21000210001240** |
| Bank Name | : | **UCO BANK** |
| Bank Branch | : | Anna Nagar West |
| IFSC | : | UCBA0002100 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **6502699356** |
| Bank Name | : | **INDIAN BANK** |
| Bank Branch | : | Asiad Colony |
| IFSC | : | IDIB000A098 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **1154135000017684** |
| Bank Name | : | **KVB BANK** |
| Bank Branch | : | Anna Nagar |
| IFSC | : | KVBL0001154 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **13240200032412** |
| Bank Name | : | **FEDERAL BANK** |
| Bank Branch | : | Anna Nagar |
| IFSC | : | FDRL0001324 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **50200031530945** |
| Bank Name | : | **HDFC BANK** |
| Bank Branch | : | Cenotaph Road, Teynampet |
| IFSC | : | HDFC0001216 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **10270882884** |
| Bank Name | : | **IDFC FIRST BANK** |
| Bank Branch | : | Anna Nagar |
| IFSC | : | IDFB0080106 |

After Deposit, please send challan and order to our address.
email to : orders@surabooks.com / Whatsapp : 81242 01000.

**For Google Pay : 98409 26027**

**For PhonePe : 98409 26027**

## DEMAND DRAFT / CHEQUE

Please send Demand Draft / cheque in favour of **'SURA PUBLICATIONS'** payable at **Chennai**. The Demand Draft / cheque should be sent with your order in School letterhead.

**SURA PUBLICATIONS**
1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar, Chennai - 600 040.
Phone : 044-4862 9977, 044-4862 7755.
Mobile : 96001 75757 / 81242 01000 / 81243 01000.
Email : orders@surabooks.com Website : www.surabooks.com

SURA'S

# தமிழ்



## மனப்பாடச் செய்யுள்

## முதல் பருவம்

**இயல் - 1**

### இன்பத்தமிழ்

தமிழுக்கும் அமுதென்று பேர்! - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்!
தமிழுக்கு நிலவென்று பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்!
தமிழுக்கு மணமென்று பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!

- பாரதிதாசன்

SURA'S

**இயல் - 2**

### திருக்குறள்

**வான் சிறப்பு**

3. கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று ஆங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை

**மக்கட்பேறு**

6. ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

**அன்புடைமை**

7. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. ※

**இனியவை கூறல்**

10. இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

- திருவள்ளுவர்

**இயல்-3**

### கல்வியைப் போற்று

அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று.

- கா.ப. செய்குதம்பிப் பாவலர்

# இரண்டாம் பருவம்

**இயல் - 1**

## திருக்குறள்

**விருந்தோம்பல்**

2. மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து ※
நோக்கக் குழையும் விருந்து.

**ஊக்கமுடைமை**

7. வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம் ※
உள்ளத்து அனையது உயர்வு.

**பயனில சொல்லாமை**

10. சொல்லுக சொல்லில் பயனுடைய சொல்லற்க
சொல்லில் பயன்இலாச் சொல். – திருவள்ளுவர்

# மூன்றாம் பருவம்

**இயல் - 1**

## பாரதம் அன்றைய நாற்றங்கால்

புல்வெளி யெல்லாம் பூக்கா டாகிப்
புன்னகை செய்த பொற்காலம்!
கல்லைக் கூட காவிய மாக்கிக்
கட்டி நிறுத்திய கலைக்கூடம்!

அன்னை நாட்டின் அமுத சுரபியில்
அன்னிய நாடுகள்பசிதீர
அண்ணல் காந்தியின் சின்னக் கைத்தடி
அறத்தின் ஊன்று கோலாக

புதுமைகள் செய்த தேசமிது!
பூமியின் கிழக்கு வாசலிது! – தாராபாரதி

**இயல் - 2**

## பராபரக் கண்ணி

தம்உயிர்போல் எவ்வுயிரும் தானென்று தண்டருள்கூர் ※
செம்மையருக்கு ஏவல்என்று செய்வேன் பராபரமே!

எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே! – தாயுமானவர்

SURA'S

இயல் - 2

# திருக்குறள்

**அறன் வலியுறுத்தல்**

1. மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.

**இன்னா செய்யாமை**

5. இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்.

**கொல்லாமை**

8. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை. - திருவள்ளுவர்

இயல் - 3

# இளைய தோழனுக்கு

ஓடிவந்து கைகுலுக்க
ஒருவருமில்லையா?
உன்னுடன் நீயே
கைகுலுக்கிக் கொள்!

தூங்கி விழுந்தால்
பூமி உனக்குப்
படுக்கையாகிறது.
விழித்து நடந்தால்
அதுவே உனக்குப்
பாதையாகிறது!

நீ
விழித்தெழும் திசையே
பூமிக்குக் கிழக்கு!
உன்
விரல்களில் ஒளிரும்
சூரியவிளக்கு!

நட!
நாளைமட்டுமல்ல
இன்றும்
நம்முடையதுதான்
நட! - மு.மேத்தா

SURA'S

# 1 முதல் பருவம்

SURA'S

# நூல்களும் ஆசிரியர்களும்

| இயல் | பாடப்பகுதி | இடம் பெற்ற நூல்/ தொகுப்பு | ஆசிரியர்கள் | ஆசிரியரின் பிற நூல்கள் படைப்புகள் |
|---|---|---|---|---|
| 1 | இன்பத் தமிழ் (கவிதைப்பேழை) | பாரதிதாசன் கவிதைகள் | புரட்சிக்கவி பாரதிதாசன் இயற்பெயர் – சுப்புரத்தினம் | குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, இருண்ட வீடு, புரட்சிக்கவி |
| 2. | ஏதிலிக் குருவிகள் (கவிதைப்பேழை) | | அழகிய பெரியவன் இயற்பெயர் – அரவிந்தன் | குறடு, நெரிகட்டு, அரூப நஞ்சு, பெருகும் வேட்கை, தகப்பன் கொடி (2003 தமிழ்நாடு அரசு விருது பெற்ற புதினம்) |
| 3. | கல்வியைப் போற்று (கவிதைப்பேழை) | நீதிவெண்பா | கா.ப.செய்குதம்பிப் பாவலர் | நபிகள் நாயக மான்மிய மஞ்சரி, திருமதினத்து அந்தாதி |
| | துன்பத்தை வெல்லும் கல்வி (கவிதைப்பேழை) | | பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் | |

SURA'S

# இயல் 1 மொழி - தமிழ்த்தேன்

## கவிதைப்பேழை

# இன்பத்தமிழ்

### ஆசிரியர் குறிப்பு :



| | |
|---|---|
| பெயர் | : பாரதிதாசன் |
| இயற்பெயர் | : சுப்புரத்தினம் |
| பிறந்த ஊர் | : புதுச்சேரி |
| பெற்றோர் | : கனகசபை – இலக்குமி அம்மையார் |
| சிறப்புப்பெயர் | : பாவேந்தர், புரட்சிக்கவிஞர் |
| பாடுபொருள் | : பெண்கல்வி, கைம்பெண் மறுமணம், பொதுவுடமை, பகுத்தறிவு முதலான புரட்சிகரமான கருத்துகள் |
| காலம் | : 29-04-1891 முதல் 21-04-1964 வரை |
| இயற்றிய நூல்கள் | : குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு, பிசிராந்தையார், அழகின் சிரிப்பு. |

### நூற் குறிப்பு

இப்பாடல் ‘பாரதிதாசன் கவிதைகள்’ தொகுப்பில் ‘தமிழ்’ என்னும் தலைப்பின் கீழ் இடம் பெற்றுள்ளது.

| பாடல் | பொருளுரை |
|---|---|
| தமிழுக்கும் அமுதென்று பேர்! – அந்தத்<br>தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்! | தமிழுக்கு **அமுது** என்று பெயர். இன்பம் தரும் அந்தத் தமிழ் எங்கள் உயிருக்கு இணையானது. |
| தமிழுக்கு நிலவென்று பேர்! – இன்பத்<br>தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்! | தமிழுக்கு **நிலவு** என்று பெயர். இன்பத்தமிழ் எங்கள் சமூக வளர்ச்சிக்கு அடிப்படையான நீர் போன்றது. |
| தமிழுக்கு மணமென்று பேர்! – இன்பத்<br>தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்! | தமிழுக்கு **மணம்** என்று பெயர். அது எங்கள் வாழ்விற்காகவே உருவாக்கப்பட்ட ஊர் ஆகும். |
| தமிழ் எங்கள் இளமைக்குப் பால்! – இன்பத்<br>தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்! | தமிழ் நாங்கள் இளமையோடு இருப்பதற்குக் காரணமான **பால்** போன்றது. நல்ல புகழ்மிகுந்த புலவர்களுக்கு அது கூர்மையான வேல் போன்ற கருவியாகும். |
| தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! – இன்பத்<br>தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்! | தமிழ் எங்கள் உயர்விற்கு எல்லையாகிய **வானம்** போன்றது. இன்பத்தமிழ் எங்கள் சோர்வை நீக்கி ஒளிரச் செய்யும் **தேன்** போன்றது. |
| தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்! – இன்பத்<br>தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்!<br>– பாரதிதாசன் | தமிழ் எங்கள் அறிவுக்குத் துணை கொடுக்கும் **தோள்** போன்றது. தமிழ் எங்கள் கவிதைக்கு வைரம் போன்ற உறுதிமிக்க **வாள்** ஆகும். |

SURA'S

### சொல்லும் பொருளும்

1. நிருமித்த – உருவாக்கிய
2. விளைவு – வளர்ச்சி
3. சமூகம் – மக்கள் குழு
4. அசதி – சோர்வு

## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ஏற்றத் தாழ்வற்ற .................. அமைய வேண்டும்.

அ) சமூகம் ஆ) நாடு இ) வீடு ஈ) தெரு **விடை: அ) சமூகம்**

2. நாள் முழுவதும் வேலை செய்து களைத்தவர்க்கு ................ ஆக இருக்கும்.

அ) மகிழ்ச்சி ஆ) கோபம் இ) வருத்தம் ஈ) அசதி **விடை: ஈ) அசதி**

3. நிலவு + என்று என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ................ .

அ) நிலயென்று ஆ) நிலவென்று
இ) நிலவன்று ஈ) நிலவுஎன்று **விடை: ஆ) நிலவென்று**

4. தமிழ் + எங்கள் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ................ .

அ) தமிழங்கள் ஆ) தமிழெங்கள்
இ) தமிழுங்கள் ஈ) தமிழ்எங்கள் **விடை: ஆ) தமிழெங்கள்**

5. ‘அமுதென்று’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................ .

அ) அமுது + தென்று ஆ) அமுது + என்று
இ) அமுது + ஒன்று ஈ) அமு + தென்று **விடை: ஆ) அமுது + என்று**

6. ‘செம்பயிர்’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................ .

அ) செம்மை + பயிர் ஆ) செம் + பயிர்
இ) செமை + பயிர் ஈ) செம்பு + பயிர் **விடை: அ) செம்மை + பயிர்**

### இன்பத்தமிழ் - பாடலின் கருத்துக்கு ஏற்றபடி பொருத்துக.

1. விளைவுக்கு – பால்
2. அறிவுக்கு – வேல்
3. இளமைக்கு – நீர்
4. புலவர்க்கு – தோள்

**விடை:**
1. விளைவுக்கு – நீர்
2. அறிவுக்கு – தோள்
3. இளமைக்கு – பால்
4. புலவர்க்கு – வேல்

### ஒத்த ஓசையில் முடியும் (இயைபு) சொற்களை எடுத்து எழுதுக.

(எ.கா.) பேர் - நேர்

**விடை:** பேர் – நீர்
பேர் – ஊர்

SURA'S

பால் - வேல்

வான் - தேன்

தோள் - வாள்

## குறுவினா

1. **பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்கள் யாவை?**

அமுதம், நிலவு, மணம்.

2. **நீங்கள் தமிழை எதனோடு ஒப்பிடுவீர்கள்?**

தேன், தங்கம், கரும்பு, சந்தனம், அமுதசுரபி, நவமணிகள் போன்றவற்றோடு தமிழை ஒப்பிடுவேன்.

## சிறுவினா

1. **இன்பத் தமிழ் - பாடலில் உங்களுக்குப் பிடித்த அடிகள் இரண்டனை எழுதுக.**

➢ தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! – இன்பத்

➢ தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்!

2. **சமூக வளர்ச்சிக்கும் நீருக்கும் உள்ள தொடர்பு யாது?** ※

➢ நீரின்றி வேளாண்தொழில் (விளைச்சல்) நிகழாது.

➢ நீர் இவ்வுலகில் உள்ள அனைத்து உயிரினங்களுக்கும் உயிர் போன்றது.

➢ சமூக வளர்ச்சிக்குத் தமிழ்மொழி நீராகப் பயன்படுகிறது.

## சிந்தனை வினா

**வேல் என்பது ஓர் ஆயுதம். தமிழ் ஏன் வேலுடன் ஒப்பிடப்படுகிறது?**

➢ வேல் கூர்மையான ஆயுதம். அதைப்போலத் தமிழ்மொழியிலுள்ள இலக்கியங்கள், பாடல்கள், கவிதைகள் கூர்மையான கருத்துகளைக் கொண்டு மக்களை நல்வழிப்படுத்துகிறது.

➢ ஆகவே, தமிழ், வேலுடன் ஒப்பிடப்படுகிறது. அதேபோல், கத்தியின் முனையைவிட பேனாவின் முனை கூர்மையானது என்ற பழமொழியும் இதனையே விளக்கும்.

## கற்பவை கற்றபின்

1. **இன்பத்தமிழ் என்ற பாடலை இனிய ஓசையுடன் பாடுக.**

பாடலைக் குரலேற்ற இறக்கத்துடன் மாணவர்களை இனிமையாகப் பாடச் செய்தல்.

2. **தமிழுக்கு நீங்கள் சூட்ட விரும்பும் பெயர்களைப் பட்டியலிடுக.**

மாணவர்கள் தமிழுக்குச் சூட்டப்படும் பெயர்களை அறிந்து எழுதுதல்.

தேன்தமிழ், செந்தமிழ், இனிமைத் தமிழ், இளமைத் தமிழ், முத்தமிழ்...

SURA'S

### 3. தமிழ்க் கவிதைகள், பாடல்களைப் படித்து மகிழ்க.

கீழ்க்காணும் பாடலைக் குரலேற்ற இறக்கத்துடன் இனிமையாகப் பாடச் செய்தல்.

**தென்றலுக்கு நன்றி!**

*கமுகொடு நெடிய தென்னை*
*கமழ்கின்ற சந்தனங்கள்*
*சமைக்கின்ற பொதிகை அன்னை*
*உனைத் தந்தாள்; தமிழைத் தந்தாள்!*
*தமிழ் எனக் ககத்தும், தக்க*
*தென்றல் நீ புறத்தும் இன்பம்*
*அமைவுறச் செய்வதை நான்*
*கனவிலும் மறவேன் அன்றோ?*

**– பாரதிதாசன்**

**(எ.கா)**

தமிழே! உயிரே! வணக்கம்!
தாய்ப்பிள்ளை உறவம்மா உனக்கும் எனக்கும்!
அமிழ்தே! நீ இல்லை என்றால்
அத்தனையும் வாழ்வில் கசக்கும்! புளிக்கும்!
தமிழே! உன்னை நினைக்கும்
தமிழன் என் நெஞ்சம் இனிக்கும்! இனிக்கும்!

**– காசி ஆனந்தன்**

## கூடுதல் வினாக்கள்

### பொருள் தருக

| | | |
|---|---|---|
| அமுது | – | அமிர்தம் |
| சமூகம் | – | மக்கள் தொகுதி |
| அசதி | – | சோர்வு, களைப்பு |
| நேர் | – | சமம் |
| வயிரம் | – | (நவரத்தினங்களுள் ஒன்று) உறுதியும் ஒளியும் மிகுந்த மணி. |
| நிருமித்த | – | உருவாக்கிய |
| விளைவு | – | வளர்ச்சி |

### பிரித்து எழுதுக

| | | |
|---|---|---|
| இன்பத்தமிழ் | = | இன்பம் + தமிழ் |
| அமுதென்று | = | அமுது + என்று |
| நிலவென்று | = | நிலவு + என்று |
| மணமென்று | = | மணம் + என்று |

### எதிர்ச்சொல் தருக

| | | |
|---|---|---|
| அமுது | × | நஞ்சு |
| இன்பம் | × | துன்பம் |
| நீர் | × | நெருப்பு |
| இளமை | × | முதுமை |
| புகழ் | × | இகழ் |
| உயர்வு | × | தாழ்வு |

SURA'S

## கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. பாரதிதாசனின் இயற்பெயர் .................. **விடை: கனகசுப்புரத்தினம்**
2. தமிழ், இளமைக்குக் காரணமான .................. போன்றது. **விடை: பால்**
3. தமிழுக்கு .............., .............., .............., என்று பெயர். **விடை: அமுது, நிலவு, வானம்**
4. தமிழ், உயர்விற்கு எல்லையாகிய .................. போன்றது. **விடை: வானம்**
5. தமிழ், அறிவுக்குத் துணை கொடுக்கும் .................. போன்றது. **விடை: தோள்**
6. இன்பத்தமிழ் சமூக வளர்ச்சிக்கு அடிப்படையான .................. போன்றது. **விடை: நீர்**
7. புலவர்களுக்குக் கூர்மையான வேல் போன்ற கருவி ........... **விடை: தமிழ்**

## குறுவினா

**1. பாரதிதாசனார் 'புரட்சிக்கவி' என்று போற்றப்படக் காரணம் யாது?**

பாரதிதாசனார் தம் கவிதைகளில் பெண்கல்வி, கைம்பெண் மறுமணம், பொதுவுடைமை, பகுத்தறிவு ஆகியவை குறித்த புரட்சிகரமான கருத்துகளைப் பாடியுள்ளமையால் 'புரட்சிக்கவி' என்று போற்றப்படுகிறார்.

**2. பாரதிதாசனாரின் சிறப்புப் பெயர்கள் யாவை?**

**பாரதிதாசனாரின் சிறப்புப் பெயர்கள் :** புரட்சிக்கவி, பாவேந்தர்.

**3. பாரதிதாசன் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.**

| | | |
|---|---|---|
| பெயர் | : | பாரதிதாசன் |
| இயற்பெயர் | : | சுப்புரத்தினம் |
| பிறந்த ஊர் | : | புதுச்சேரி |
| பெற்றோர் | : | கனகசபை - இலக்குமி அம்மையார் |
| பணி | : | தமிழாசிரியர் |
| சிறப்புப்பெயர் | : | பாவேந்தர், புரட்சிக்கவி |
| காலம் | : | 29-04-1891 முதல் 21-04-1964 வரை |
| இயற்றிய நூல்கள் | : | குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு, பிசிராந்தையார், அழகின் சிரிப்பு. |

☆☆☆

SURA'S

உரைநடை உலகம்

# வளர்தமிழ்



## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 'தொன்மை' என்னும் சொல்லின் பொருள் ................ . ※

அ) புதுமை ஆ) பழமை இ) பெருமை ஈ) சீர்மை **விடை: ஆ) பழமை**

2. 'இடப்புறம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .................. . ※

அ) இடன் + புறம் ஆ) இடை + புறம்

இ) இடம் + புறம் ஈ) இடப் + புறம் **விடை: இ) இடம் + புறம்**

3. 'சீரிளமை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .............. . ※

அ) சிறு + இளமை ஆ) சீர்மை + இளமை

இ) சீரி + இளமை ஈ) சீற் + இளமை **விடை: ஆ) சீர்மை + இளமை**

4. சிலம்பு + அதிகாரம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ............. .

அ) சிலம்பதிகாரம் ஆ) சிலப்பதிகாரம்

இ) சிலம்புதிகாரம் ஈ) சிலபதிகாரம் **விடை: ஆ) சிலப்பதிகாரம்**

5. கணினி + தமிழ் என்பதைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ............ .

அ) கணினிதமிழ் ஆ) கணினித்தமிழ்

இ) கணிணிதமிழ் ஈ) கனினிதமிழ் **விடை: ஆ) கணினித்தமிழ்**

6. "தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பாடியவர்............ .

அ) கண்ணதாசன் ஆ) பாரதியார்

இ) பாரதிதாசன் ஈ) வாணிதாசன் **விடை: ஆ) பாரதியார்**

7. 'மா' என்னும் சொல்லின் பொருள் ................... .

அ) மாடம் ஆ) வானம் இ) விலங்கு ஈ) அம்மா

**விடை: இ) விலங்கு**

### கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. நாம் சிந்திக்கவும் சிந்தித்ததை வெளிப்படுத்தவும் உதவுவது ................ **விடை: மொழி**

2. தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழைமையான இலக்கண நூல் ...................... ※

**விடை: தொல்காப்பியம்**

3. மொழியைக் கணினியில் பயன்படுத்த வேண்டும் எனில், அஃது ........................... அடிப்படையில் வடிவமைக்கப்பட வேண்டும். **விடை: எண்களின்**

SURA'S

## சொற்களைச் சொந்தத் தொடரில் அமைத்து எழுதுக.

1. தனிச்சிறப்பு ...............................................................................

விடை: திருக்குறள் பல மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது, அதன் **தனிச்சிறப்பு** ஆகும்.

2. நாள்தோறும் ..........................................................................

விடை: நாம் **நாள்தோறும்** நல்ல பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிப்பது நல்லது.

## குறுவினா

1. **தமிழ் ஏன் மூத்தமொழி என்று அழைக்கப்படுகிறது?**

**தமிழ்மொழி – மூத்தமொழி :**

➢ இலக்கியங்கள் தோன்றிய பிறகே, அவற்றிற்கு இலக்கணம் தோன்றியிருக்க வேண்டும். தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப்பழைமையான இலக்கணநூல் தொல்காப்பியம்.

➢ இந்நூல், சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாக அறியப்படுகிறது. அதற்கும் முன்னதாகவே, தமிழில் இலக்கியங்கள் பல இருந்திருக்க வேண்டும். இவற்றைக் கொண்டு தமிழ் தொன்மைமிக்க மூத்த மொழி என்பதை அறியலாம்.

2. **நீங்கள் அறிந்த தமிழ்க் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.** ※

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி, யசோதர காப்பியம், சூளாமணி, நாககுமார காவியம், உதயணகுமார காவியம், நீலகேசி.

## சிறுவினா

1. **அஃறிணை, பாகற்காய் ஆகிய சொற்களின் பொருள் சிறப்பு யாது?** ※

**அஃறிணை, பாகற்காய் என்னும் சொற்களின் பொருள் சிறப்பு :**

➢ திணை – உயர்திணை, அஃறிணை என இருவகைப்படும்.

➢ உயர்திணையின் எதிர்ச்சொல் தாழ்திணை என அமையவேண்டும்.

➢ ஆனால் நம் முன்னோர் தாழ்திணை என்று கூறாமல் உயர்வு அல்லாத திணை (அல் + திணை) அஃறிணை என்று பெயரிட்டனர்.

**பாகற்காய் :** பாகற்காய் கசப்புச் சுவை உடையது. அதனைக் கசப்புக்காய் என்று கூறாமல், இனிப்பு அல்லாத காய் (பாகு + அல் + காய்) பாகற்காய் என வழங்கினர்.

2. **தமிழ் இனிய மொழி என்பதற்கான காரணம் தருக.** ※

**தமிழ் இனிய மொழி என்பதற்கான காரணம்:**

➢ ஓசை இனிமை, சொல் இனிமை, பொருள் இனிமை ஆகியவை ஒருங்கே அமைந்த இலக்கியங்கள் பலவற்றைக் கொண்டது தமிழ்மொழி.

➢ பன்மொழி கற்ற கவிஞராகிய பாரதியார், தமிழ் மொழியின் இனிமையை

“யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்” என்று பாடுகிறார்.

SURA'S

### 3. தமிழ் மொழியின் சிறப்பைக் குறித்து ஐந்து வரிகளில் எழுதுக.

- உலக மொழிகள் பலவற்றுள் இலக்கண, இலக்கியவளம் பெற்றுத் திகழும் மொழிகள் மிகச்சிலவே. அவற்றுள் செம்மை மிக்க மொழி என ஏற்றுக் கொள்ளப்பட்டவை ஒரு சில மொழிகளே! தமிழ்மொழி அத்தகு சிறப்பு மிக்க செம்மொழியாகும்.
- தமிழ் இலக்கியங்கள் ஓசை இனிமை, சொல் இனிமை, பொருள் இனிமை கொண்டவை.
- தமிழ் மொழி பேசவும், படிக்கவும், எழுதவும் உகந்த மொழி. தமிழ் எழுத்துகளின் ஒலிப்பு முறை மிக எளிமையானது. தமிழ் எழுத்துகள் பெரும்பாலும் வலஞ்சுழி எழுத்துகளாகவே அமைந்துள்ளன.
- இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழைக் கொண்ட மொழியாகும். தமிழ் மொழி சொல்வளம் மிக்கது. ஒரு பொருளின் பல நிலைகளுக்கும் வெவ்வேறு பெயர் சூட்டுவது தமிழ்மொழியின் சிறப்பாகும்.

## சிந்தனை வினா

### 1. தமிழ் மொழி படிக்கவும் எழுதவும் எளியது என்பது பற்றி உங்கள் கருத்து யாது?

**தமிழ் மொழி படிக்கவும் எழுதவும் எளியமொழி :**

- தமிழ் எழுத்துகள் வாயைத் திறத்தல், உதடுகளை விரித்தல், குவித்தல் ஆகிய மூன்று எளிய இயக்கங்களால் உயிர் ஒலிகள் பன்னிரண்டையும் எளிமையாக ஒலிக்க இயலும்.
- நாக்கு, உதடு, பல், அண்ணம் ஆகிய பேச்சுறுப்புகளின் உதவியால் காற்றை அடைத்தும் வெளியேற்றியும் மெய்யொலிகளை ஒலிக்க இயலும்.
- உயிரும் மெய்யும் இணைவதால் தோன்றுபவை உயிர்மெய் ஒலிகள். உயிர், மெய் ஆகியவற்றின் அடிப்படை ஒலிப்பு முறைகளை அறிந்தால் 216 உயிர்மெய் எழுத்துகளையும் எளிதாகக் கற்கலாம். எழுத்துகளைக் கூட்டி ஒலித்தால் தமிழ் படித்தல் இயல்பாக நிகழும்.
- தமிழ்மொழியை எழுதும் முறையும் மிக எளிமையானது இடப்புறமிருந்து வலப்புறமாகச் சுழித்து எழுதுவது குழந்தைகளின் இயல்பு. இதற்கேற்ப, தமிழ் எழுத்துகள் பெரும்பாலும் வலஞ்சுழி எழுத்துகளாகவே அமைந்துள்ளன. இதன் மூலம் தமிழ்மொழி படிக்கவும் எழுதவும் எளியது என்பதை அறியலாம்.

### 2. தமிழ் மொழி வளர்மொழி என்பதை உணர்கிறீர்களா? காரணம் தருக.

- தமிழில் காலந்தோறும் பல வகையான இலக்கிய வடிவங்கள் புதிது புதிதாக உருவாகி வருகின்றன.
- துளிப்பா, புதுக்கவிதை, கவிதை, செய்யுள் போன்றன தமிழ்க் கவிதை வடிவங்கள், கட்டுரை, புதினம், சிறுகதை போன்றன உரைநடை வடிவங்கள்.
- தற்போது அறிவியல் தமிழ், கணினித் தமிழ் என்று மேலும் மேலும் வளர்ந்து கொண்டே வருகிறது. எனவே தமிழ்மொழி வளர்மொழி என்பதை உணர்கிறேன்.

SURA'S

## கற்பவை கற்றபின்

**1. மாற்றங்களுக்கு ஏற்பத் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் மொழி தமிழ் என்பது பற்றிக் கலந்துரையாடுக.**

மாணவர்களைக், 'கால மாற்றத்திற்கேற்ப தன்னைப் புதுப்பித்துக்கொள்ளும் மொழி தமிழ்மொழி' பற்றிப் பேசச் செய்தல்.

**மாணவன் 1** : வணக்கம். நம் தமிழ்மொழியானது காலத்திற்கேற்பத் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்' எனப் புகழப்படும் தமிழ் மொழியில் உள்ள இலக்கிய இலக்கண வளங்களால்தான் அழியா நிலை பெற்றுள்ளது எனலாம்.

**மாணவன் 2** : அதுமட்டுமா? ஒலியாகத் திரிந்து, சித்திரமாய் மாறிப் பல மொழிகளுடன் இணைந்து உருக்கள் பலப்பல எடுத்தும் காலம் பல கடந்து கல்வெட்டுகளில் செதுக்கப்பட்டும் ஓலைச்சுவடிகளில் வரையப்பட்டும் காகிதங்களில் மிளிர்ந்து, தற்போது மின்னியல் வடிவில் ஒளிர்ந்து கொண்டும் உள்ளது நம் தாய்மொழியாம் தமிழ். இது, கால மாற்றங்களுக்கேற்பத் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் சிறப்புப் பெற்றது.

**மாணவன் 1** : பிறமொழிகள் தங்கள் தொன்மை மாறாமலும் அவை இருந்த இடத்திலிருந்து இறங்கி வராமலும் காலத்திற்கேற்ப மாற்றம் கொள்ளாமலும் இருந்ததால் வழக்கொழிந்துவிட்டன. ஆனால் நம் தமிழானது கற்றவர், கல்லாதவர் என அனைவருடைய நாவிலும் நடனமாடுகிறது. இதனால், அழியாப் புகழுடன் விளங்குகிறது. கன்னித்தமிழாய் இருப்பதோடல்லாமல் மொழிகளுக்கெல்லாம் தாயாகவும் விளங்குகிறது.

**மாணவன் 2** : சரியாகச் சொன்னாய்! தமிழ் மேடைத் தமிழ், எழுத்துத் தமிழ், பேச்சுத் தமிழ் என்று வெவ்வேறு உருவத்தில் தன்னை வளைந்து கொடுக்கும் தன்மையால்தான் இன்றும் வளர்ந்து கொண்டே வருகிறது.

**மாணவன் 1** : இன்றைய நடைமுறைக்கு ஏற்ப ஊடகங்களில் பயன்படுத்தப்படுகிறது. தமிழ்மொழியானது தனியாக வளர்க்கப்படவில்லை. பக்தி இலக்கியக் காலத்தில் பக்திப் பாடல்கள், விடுதலைப் போராட்டக் காலத்தில் தேசபக்திப் பாடல்கள் என மக்கள் மனதில் வளர்ந்து செழுமை பெற்றுள்ளது.

**மாணவன் 2** : சரியாகச் சொன்னாய்! இவ்வாறு வளரும் தமிழ்மொழியானது, இன்றைய அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியுடன் இணைந்து செல்லும் வகையில் புதிய கலைச் சொற்களை உருவாக்கித் தமிழ்மொழி தன்னை நாள்தோறும் புதுப்பித்து வருகிறது. தமிழ் இணையம், முகநூல், புலனம், குரல்தேடல், தேடுபொறி, செயலி, தொடுதிரை முதலிய சொற்களை உருவாக்குகிறது.

SURAS

**மாணவன் 1** : அதுமட்டுமா? சமூக ஊடகங்களிலும் பயன்படத்தக்க திறன் கொண்ட புது மொழியாகவும் தமிழ் திகழ்ந்து வருகிறது எனலாம். தமிழ் மூத்த மொழியாக மட்டுமன்றி இனிமை, எளிமை, சீர்மை, வளமை, இளமை மிக்க வளர்மொழியாகவும் நாளும் சிறந்து விளங்கும் புதுமொழியாகவும் திகழ்கிறது. தற்போது, தமிழ்மொழி அறிவியல் தமிழ், கணினித் தமிழ், மாற்றங்களுக்கு ஏற்றவாறு மேலும் தன்னைப் புதுப்பித்துக் கொள்கிறது. காலத்தின் தேவைக்கேற்பச் சரியான சொற்கள் தமிழில் புகுந்து தொடர்ந்து இன்றும் இயங்கி வருகின்றன.

**2. தமிழ் மொழி பேசத்தெரியாத குடும்பத்தினர் உங்கள் பக்கத்து வீட்டில் உள்ளனர். அவர்களுக்கு நீங்கள் கற்றுத்தர விரும்பும் பத்துத் தமிழ்ச் சொற்களைப் பட்டியலிடுக.**

மாணவர்கள் நம் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் தமிழ்ச் சொற்களைக் கற்றுத் தருதல்.

**தமிழ்சொற்கள் :**

1. வணக்கம்!
2. வாருங்கள்!
3. அமருங்கள்!
4. சாப்பிடுங்கள்!
5. எப்படி இருக்கிறீர்கள்?
6. உங்கள் பெயர் என்ன?
7. தண்ணீர்
8. நன்றி!
9. பொறுத்துக்கொள்ளுங்கள்!
10. வாழ்க வளர்க!

**3. வாழ்த்துகளைத் தமிழில் கூறுவோம்.**

மாணவர்களைத் தமிழில் வாழ்த்துகளை அறிந்து வந்து எழுதச் செய்தல்.

**திருமண வாழ்த்து**

பதினாறும் பெற்றுப் பெரு வாழ்வு வாழ்க! பல்லாண்டு காலம் பண்பட்டு வாழ்க!
இரட்டைக்கிளவிபோல் இணைந்தே என்றும் வாழ்க!
இன்றுபோல் என்றும் இன்முகத்துடன் வாழ்க!
அன்போடும் அறிவோடும் பண்பான மழலைச் செல்வங்கள் பெற்று மகிழ்க!
அறத்தோடும் வளத்தோடும் வாழும் முறைகள் கற்றுத் தருக!
வாழ்க! வாழ்கவே....! வாழ்கவே......!
வளமாய் நலமாய்....! மணமக்கள் நீடுழி
வாழ்க! வாழ்கவே....! வாழ்கவே......!

## கூடுதல் வினாக்கள்

**பிரித்து எழுதுக**

| | | |
|---|---|---|
| ஆறாயிரம் | = | ஆறு + ஆயிரம் |
| யாமறிந்த | = | யாம் + அறிந்த |
| பாரதத்தாய் | = | பாரதம் + தாய் |
| இடஞ்சுழி | = | இடம் + சுழி |
| சொற்சிறப்பு | = | சொல் + சிறப்பு |

SURA'S

| | | |
|---|---|---|
| பத்துப்பாட்டு | = | பத்து + பாட்டு |
| தனித்தனி | = | தனி + தனி |
| நாடகத்தமிழ் | = | நாடகம் + தமிழ் |
| கன்னித்தமிழ் | = | கன்னி + தமிழ் |

## சேர்த்து எழுதுக

| | | |
|---|---|---|
| செம்மை + மொழி | = | செம்மொழி |
| தமிழ் + தாய் | = | தமிழ்த்தாய் |
| வலம் + சுழி | = | வலஞ்சுழி |
| அல் + திணை | = | அஃறிணை |
| எட்டு + தொகை | = | எட்டுத்தொகை |
| இசை + தமிழ் | = | இசைத்தமிழ் |
| இயல் + தமிழ் | = | இயற்றமிழ் |
| கலை + சொல் | = | கலைச்சொல் |
| வான் + ஒலி | = | வானொலி |

## கோடிட்ட இடங்களை நிரப்புக

1. பேசவும் படிக்கவும் எழுதவும் உகந்த மொழி ................ விடை: **தமிழ்மொழி**
2. உயிரும் மெய்யும் இணைவதால் தோன்றுபவை ................ விடை: **உயிர்மெய்**
3. தமிழ் எழுத்துகள் பெரும்பாலும் ...... சுழி எழுத்துகளாகவே அமைந்துள்ளன. விடை: **வலஞ்**
4. ட,ய,ழ ஆகியவை .............. சுழி எழுத்துகள் விடை: **இடஞ்**
5. ஒழுங்கு முறையைக் குறிக்கும் சொல் ................ விடை: **சீர்மை**
6. உயர்வு அல்லாத திணை ............ விடை: **அஃறிணை**
7. பாகு + அல் + காய் = ................ விடை: **பாகற்காய்**
8. தொல்காப்பியம், நன்னூல் ஆகியவை ............... நூல்கள். விடை: **இலக்கண**
9. சங்க இலக்கியங்கள் ........., .......... . விடை: **பத்துப்பாட்டு, எட்டுத்தொகை**
10. சிலப்பதிகாரம், மணிமேகலை முதலியன .......... விடை: **ஐம்பெருங்காப்பியங்கள்**
11. எண்ணத்தை வெளிப்படுத்தும் தமிழ் ................ விடை: **இயல்தமிழ்**
12. உள்ளத்தை மகிழ்விக்கும் தமிழ் ................ விடை: **இசைத்தமிழ்**
13. உணர்வில் கலந்து வாழ்வின் நிறைகுறைகளைச் சுட்டிக்காட்டும் தமிழ் ............ விடை: **நாடகத்தமிழ்**

## குறுவினா

**1. மொழி நமக்கு எவ்வாறு உதவுகிறது?**

நாம் சிந்திக்கவும் சிந்தித்ததை வெளிப்படுத்தவும் பிறர் கருத்தை நாம் அறியவும் மொழி உதவுகிறது.

**2. தமிழ்க் கவிதை வடிவங்கள் யாவை?**

துளிப்பா, புதுக்கவிதை, கவிதை, செய்யுள் போன்றன தமிழ்க்கவிதை வடிவங்கள் ஆகும்.

**3. தமிழ்மொழியின் சிறப்பினை எழுதுக.**

உலக மொழிகளுள் பலவற்றுள் இலக்கண, இலக்கியவளம் பெற்றுத் திகழும் மொழிகள் மிகச்சிலவே! அவற்றுள் செம்மை மிக்க மொழி என ஏற்றுக் கொள்ளப்பட்டவை சில மொழிகள். அத்தகு சிறப்பு மிக்க செம்மொழியாகும் நமது தமிழ்மொழியாகும்.

**4. தமிழ் படித்தல் இயல்பாய் நிகழ நாம் செய்யவேண்டியது என்ன?**

உயிர் எழுத்துகள், மெய் எழுத்துகள் ஆகியவற்றின் ஒலிப்பு முறைகளை அறிந்து கொண்டால், உயிர்மெய் எழுத்துகளை எளிதாக ஒலிக்கலாம். எழுத்துகளைக் கூட்டி ஒலித்தாலே தமிழ் படித்தல் இயல்பாக நிகழும்.

**5. தமிழ், தமிழ்நாடு, தமிழன் ஆகிய சொற்கள் முதலில் ஆளப்பட்ட இலக்கியங்கள் யாவை?**

➢ தொல்காப்பியத்தில் 'தமிழ்' என்னும் சொல் ஆளப்பட்டுள்ளது.
➢ சிலப்பதிகாரத்தில் (வஞ்சிக்காண்டம்) 'தமிழ்நாடு' என்னும் சொல் ஆளப்பட்டுள்ளது.
➢ அப்பரின் தேவாரத்தில் 'தமிழன்' என்னும் சொல் ஆளப்பட்டுள்ளது.

**6. முத்தமிழை விளக்குக.**

➢ எண்ணத்தை வெளிப்படுத்துவது இயல்தமிழ்.
➢ உள்ளத்தை மகிழ்விப்பது இசைத்தமிழ்.
➢ உணர்வில் கலந்து வாழ்வின் நிறைகுறைகளைச் சுட்டிக்காட்டுவது நாடகத்தமிழ் ஆகும்.

**7. உரைநடை வடிவங்கள் யாவை?**

கட்டுரை,புதினம், சிறுகதை போன்றன உரைநடை வடிவங்கள் ஆகும்.

## சிறுவினா

**1. தமிழ்மொழி வளமை மொழி விளக்குக.**

**இலக்கண இலக்கிய வளம்**

➢ தொல்காப்பியம், நன்னூல் உள்ளிட்ட இலக்கண நூல்கள் மிகுந்தது.
➢ பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகிய சங்க இலக்கியங்களைக் கொண்டது.
➢ திருக்குறள், நாலடியார் முதலிய அறநூல்கள் பலவும் நிறைந்தது.
➢ சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய காப்பியங்களைக் கொண்டது.

**சொல் வளம்**

ஒரு பொருளின் பல நிலைகளுக்கும் வெவ்வேறு பெயர் சூட்டியிருப்பது நம் தமிழ்மொழியின் சொல்வளத்திற்குச் சான்றாகும்.

**சான்று:** பூவின் ஏழுநிலை
ஒரு சொல் பல பொருளைக் குறித்தும் வரும்.

**சான்று :** மா-மரம், விலங்கு, திருமகள்... இவ்வாறு இலக்கிய, இலக்கண வளம், சொல்வளம் நிறைந்தது தமிழ்மொழி.

**2. 'தமிழ்' - புதுமை மொழி விளக்குக.**

தமிழில் புதிய புதிய கலைச்சொற்கள் உருவாகி வருகின்றன.

**சான்று:** இணையம், முகநூல், புலனம், குரல்தேடல், தேடுபொறி, செயலி, தொடுதிரை சமூக ஊடகங்களான செய்தித்தாள், தொலைக்காட்சி ஆகியவற்றிலும் பயன்படத்தக்க மொழியாகத் தமிழ்மொழி விளங்குகிறது.

☆☆☆

SURA'S

விரிவானம்

# ஒளி பிறந்தது

**அப்துல் கலாமுடன் நேர்காணல்**




## மதிப்பீடு

**தமக்குப் பெருமகிழ்வை அளித்ததாக அப்துல் கலாம் குறிப்பிடும் நிகழ்வு யாது?** ※

"போலியோவினால் பாதிக்கப்பட்டவர்கள் மூன்று கிலோ எடையுள்ள செயற்கைக் கால்களைப் பொருத்திக்கொண்டு சிரமப்பட்டு நடப்பதைக் கண்டேன். பாதுகாப்புக் கருவிகளில் பயன்படுத்தப்படும் 'கார்பன் இழையைக்' கொண்டு முந்நூறு கிராம் எடையில் செயற்கைக் கால்கள் உருவாக்கப்பட்டன. அதனை அவர்கள் அணிந்து மகிழ்ந்த நிகழ்ச்சிதான் எனக்குப் பெருமகிழ்வை அளித்தது" என்று அப்துல் கலாம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## கற்பவை கற்றபின்

**1. கனவு காணுங்கள் என்பது அப்துல் கலாமின் பொன்மொழி. உங்கள் கனவுகள் பற்றி வகுப்பில் கலந்துரையாடுக.**

(வகுப்பில் மாணவர்கள் தங்கள் கனவுகளைப் பற்றிக் கலந்துரையாடுதல்)

**மாணவர் 1** : வணக்கம். என் கனவு நன்றாகப் படித்து உலகமே என்னைப் பற்றி அறியும்படி சாதனை புரிய வேண்டும் என்பதுதான்.

**மாணவர் 2** : நல்லது. எந்தத் துறையில் சாதிக்க விரும்புகிறாய்?

**மாணவர் 1** : நான் அறிவியல் துறையில் சாதிக்க வேண்டும் என விரும்புகிறேன். எனக்கு அப்துல்கலாம் மாதிரி அறிவியலாளர் ஆக வேண்டும் என்பது என் வாழ்க்கை இலக்காகவே எண்ணுகிறேன்.

**மாணவர் 2** : நன்று! நன்று! அதுசரி எத்தனையோ அறிவியலாளர்கள் உள்ளனர். நீ ஏன் அப்துல்கலாம் மாதிரி என்று கூறுகிறாய்?

**மாணவர் 1** : நன்றாகக் கேட்டாய். அவரை நான் என் முன்மாதிரியாக எண்ணுகிறேன். அவர் எளிமையான குடும்பத்தில் பிறந்து சொந்த முயற்சியில் படித்து அறிவியலாளர் ஆனவர்.

**மாணவர் 2** : ஆமாம்! அவர் காட்சிக்கு எளிமையானவர். நம்மைப் போன்ற மாணவர்களிடம் உரையாடுவதை மிகவும் விரும்பியவர்.

**மாணவர் 1** : அவைமட்டுமா? தம்முடைய கடுமையான உழைப்பால் முன்னேறியவர். அவர் சென்ற பணிகளுக்கெல்லாம் அவருடைய உழைப்பும் அவர் கற்ற கல்வியுமே பரிந்துரையாக இருந்துள்ளன.

**மாணவர் 2** : அதுசரி! நீ எதிர்காலத்தில் எவற்றில் எல்லாம் மாற்றம் வரவேண்டும் என்று எதிர்பார்க்கிறாய்?

**மாணவர் 1** : நான் அறிவியல் துறையில் பல மாற்றங்களைக் கொண்டு வருவேன். அப்துல்கலாம் ஐயா கூறியதைப்போல், நான் கிராமங்களில் உள்ள பிரச்சனைகளைத் தீர்க்க முயற்சி செய்வேன். ஐயா அவர்களின் கனவை நனவாக்கக் கிராமங்களில் உள்ள இளைஞர்களைக் கனவு காணச் செய்வேன்!

**மாணவர் 2** : இளைஞர்கள் என்ன கனவு காண வேண்டும்?

**மாணவர் 1** : சொல்கிறேன் கேள்! இளைஞர்கள் வாய்மைக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். நல்லவற்றை எண்ண வேண்டும். அதன்வழி நடக்க வேண்டும். கடுமையாகவும் உண்மையாகவும் உழைக்க வேண்டும். தோல்விக்குத் தோல்வியைத் தர வேண்டும். துன்பத்திற்குத் துன்பத்தைத் தர வேண்டும். அவர்களுடைய கனவுகளாவன "அரும் பெரும் இலக்குடன் நாளைய வரலாற்றை உருவாக்குவோம். நாம் வசிக்கும் கிராமத்தை வளம் பொருந்தியதாக மாற்றுவோம். மேற்படிப்புப் படிக்கும் மாணவர்கள் வேளாண்துறையைத் தேர்ந்தெடுப்போம். வேளாண்மையில் புதுமைகள் செய்வோம். நாட்டின் உயிர் கிராமங்கள் என உணர்ந்து செயல்படுவோம். இடைத்தரகர்கள் இன்றி நேரடி விற்பனை முறையைக் கொண்டு வருவோம்" இளைஞர்கள் இக்கனவை நனவாக்கினால் கட்டாயம் நம் கிராமங்கள் முன்னேறும். அதனைத் தொடர்ந்து நாடும் முன்னேறும்.

**மாணவர் 2** : நீ அறிவியலாளராக வேண்டும் என்று கூறினாயே? ஏதோ செயற்கைக்கோள், ஏவுகணை என்று கூறுவாய் என எதிர்பார்த்தேன்.

**மாணவர் 1** : இதுவும் அறிவியல்தான். நிலம் விவசாயத்திற்கு ஏற்றாற் போல் உள்ளதா எனச் சோதித்து அதற்கேற்றபடி மாற்றுவது, நிலத்தடி நீர் பெருகுவதற்குச் செய்ய வேண்டிய வழிமுறைகள், நல்ல விதைகளைத் தேர்ந்தெடுப்பது போன்றவற்றை ஆய்வு செய்து விவசாயம் மேம்படச் செய்ய வேண்டும். அம்முறையில் விவசாயம் செய்து பல மடங்கு விளைச்சல் பெறுவதற்கு ஆவன செய்தல் வேண்டும். இவையெல்லாம் அறிவியல் சார்ந்ததே. இயற்கை முறையில் வேளாண்மை செய்து மக்கள் நோய் நொடியின்றி வாழ வழி வகுப்பேன்!

**மாணவர் 2** : உன்னுடைய கனவு நனவாக வாழ்த்துகள்!

**மாணவர் 1** : நன்றி!

**2. நீங்கள் நேர்காணல் செய்ய விரும்பும் ஒருவரைக் குறிப்பிடுக. அவரிடம் கேட்க விரும்பும் ஐந்து வினாக்களைப் பட்டியலிடுக.**

நான் நேர்காணல் செய்ய விரும்பும் நபர் Dr.APJ. அப்துல் கலாம் அவர்கள்.

**வினாக்கள் :**

- அறிவியல் மீது உங்களுக்கு ஆர்வம் ஏற்படக்காரணம் எது?
- சிறு வயதில் என்னவாக வேண்டும் என விரும்பினீர்கள்?
- உங்களுக்குப் பிடித்தத் துறை எது? (அறிவியல் தவிர)
- உங்களுக்கு முன் மாதிரியாக யார் இருந்தனர்?
- வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய சில யோசனைகள் கூறுங்கள் ஐயா?

SURA'S

**3. நீங்கள் அப்துல் கலாமிடம் கேட்க விரும்பும் வினாக்களை எழுதுக.**

இடம் : செஞ்சி

நாள் : 09-03-20xx

மதிப்பிற்குரிய ஐயா,

வணக்கம், நான் செஞ்சி அரசு உயர்நிலைப் பள்ளியில் ஆறாம் வகுப்புப் படித்து வருகிறேன். உங்களைப் போல, அறிவியல் அறிஞராக வேண்டும் என்பதே என்னுடைய ஆசை, கனவு, விருப்பம் உங்களிடம் பல விஷயங்களைக் கற்றுக் கொள்ள நினைக்கிறேன். அதற்காக உங்களிடம் சில கேள்விகள் கேட்க விரும்புகிறேன். எனவே அதற்குத் தாங்கள் பதில் அளிக்குமாறு மிகவும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**கேள்விகள் :**

- நீங்கள் சிறு வயதில் அறிவியல் அறிஞராக வருவேன் என்று நினைத்துப் பார்த்ததுண்டா?
- உங்கள் ஆராய்ச்சியில் உங்களைக் கவர்ந்தது எது?
- ஒரு சிறந்த குடிமகன் எப்படி இருக்க வேண்டும் என நீங்கள் நினைக்கிறீர்கள்?
- நம்முடைய அறிவியலாளர்கள் கண்டுபிடிக்கும் தொழில் நுட்பங்கள் விவசாயத்திற்கு எந்த அளவு பயன்படுகிறது?
- நாட்டில் வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய வழி சொல்லுங்கள்?
- உங்களுக்குப் பிடித்த தலைவர் யார்? ஏன்?
- உங்களுக்குப் பிடித்த புத்தகம் எது? ஏன்?
- "ஊழல் இல்லாத நாடு" சாத்தியப்படுமா?
- இந்த உலகிலே மிகச் சிறந்த கண்டுபிடிப்பு எது?
- எதிர்காலத்தில் இந்தியாவின் வளர்ச்சி எப்படி இருக்குமென நீங்கள் நினைக்கிறீர்கள்?

இப்படிக்கு,

அன்புடன்,

செந்தாழினி

உறைமேல் முகவரி :

**பெறுநர்**

அஞ்சல் தலை

மேதகு.A.P.J.அப்துல் கலாம் அவர்கள்,
மேனாள் குடியரசுத் தலைவர்,
புதுடெல்லி.

☆☆☆

SURA'S

**கற்கண்டு**

# தமிழ் எழுத்துகளின் வகையும் தொகையும்

**மனவரைபடம்**







SURA'S

**மெய்யெழுத்துகள் - 18**
**(அரை மாத்திரை அளவு ஒலிக்கும்)**

| வல்லினம் | மெல்லினம் | இடையினம் |
|---|---|---|
| (க், ச், ட், த், ப், ற்) | (ங், ஞ், ண், ந், ம், ன்) | (ய், ர், ல், வ், ழ், ள்) |

**தமிழ் எழுத்துகள்**

| | | |
|---|---|---|
| உயிர் எழுத்துகள் | - | 12 |
| மெய் எழுத்துகள் | - | 18 |
| ஆயுத எழுத்து | - | 1 |
| உயிர் மெய் எழுத்து | - | 216 |
| மொத்தம் | - | 247 |

**ஆய்த எழுத்து**

- அஃது, இஃது
- ஃ
- அரை மாத்திரை அளவு ஒலிக்கும்

SURA'S

## மதிப்பீடு

### கொடுக்கப்பட்டுள்ள மாத்திரை அளவுக்கேற்பச் சொற்களை எழுதுக.

1. உயிரெழுத்தில் தொடங்கும் இரண்டு மாத்திரை அளவுள்ள சொல் .............. . **விடை: அது**
2. இரண்டு மாத்திரை அளவுள்ள ஓரெழுத்துச்சொல் ....................... . **விடை: தீ**
3. ஆய்த எழுத்து இடம்பெறும் இரண்டரை மாத்திரை அளவுள்ள சொல்........................... . **விடை: அஃது**

### குறுவினா

**1. தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

➢ தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும். அவை,

➢ எழுத்து இலக்கணம், சொல் இலக்கணம், பொருள் இலக்கணம், யாப்பு இலக்கணம், அணி இலக்கணம்.

**2. மெய்யெழுத்துகளை மூவகை இனங்களாக வகைப்படுத்தி எழுதுக.** ※

➢ வல்லினம் : க், ச், ட், த், ப், ற்.

➢ மெல்லினம் : ங், ஞ், ண், ந், ம், ன்

➢ இடையினம் : ய், ர், ல், வ், ழ், ள்

**3. தமிழ் எழுத்துக்குரிய மாத்திரை அளவுகளைக் குறிப்பிடுக.**

➢ குறில் எழுத்தை ஒலிக்கும் கால அளவு : 1 மாத்திரை

➢ நெடில் எழுத்தை ஒலிக்கும் கால அளவு : 2 மாத்திரை

➢ மெய் எழுத்துக்கள் ஒலிக்கும் கால அளவு : ½ மாத்திரை

➢ ஆய்த எழுத்து ஒலிக்கும் கால அளவு : ½ மாத்திரை.

## கற்பவை கற்றபின்

**உங்கள் பெயர் மற்றும் உங்கள் நண்பர்களது பெயர்களுக்கான மாத்திரை அளவை கண்டுபிடிக்கவும்.**

எ. கா. கபிலர் - 1 + 1 + 1 + ½ = 3½

மாணவர்களைத் தமிழ் எழுத்துகளின் மாத்திரை அளவை அறிந்து கொள்ளச் செய்தல்.

| வ. எண் | பெயர் | மாத்திரை அளவு |
|---|---|---|
| 1 | அரவிந்தன் | 1 + 1 + 1 + ½ + 1 + ½ = 5 |
| 2 | கவின் | 1 + 1 + ½ = 2½ |
| 3 | செந்தாழினி | 1 + ½ + 2 + 1 + 1 = 5½ |
| 4 | ஆனந்த் | 2 + 1 + ½ + ½ = 4 |

## கூடுதல் வினாக்கள்

SURA'S

**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. தமிழ் இலக்கணம் ............... வகைப்படும். **விடை: ஐந்து**
2. இயல்பாகக் காற்று வெளிப்படும்போது .............. எழுத்துகள் பிறக்கின்றன. **விடை: உயிர்**
3. எழுத்துகளை ஒலிப்பதற்கான காலஅளவு .................. **விடை: மாத்திரை**
4. குறில் எழுத்துக்கான மாத்திரை .................. **விடை: ஒன்று**
5. நெடில் எழுத்துக்கான மாத்திரை .................. **விடை: இரண்டு**
6. உயிர் எழுத்துகள் மொத்தம் .................. **விடை: பன்னிரண்டு**
7. மெய் எழுத்துகள் மொத்தம் .................. **விடை: பதினெட்டு**
8. மெய் எழுத்துகள் .................. வகைப்படும். **விடை: மூன்று**
9. வன்மையாக ஒலிப்பவை .................. **விடை: வல்லினம். க், ச், ட், த், ப், ற்**
10. மென்மையாக ஒலிப்பவை .................. **விடை: மெல்லினம். ங்,ஞ்,ண்,ந்,ம்,ன்**
11. வன்மையுமின்றி மென்மையுமின்றி இரண்டிற்கும் இடைப்பட்டு ஒலிப்பவை ............... **விடை: இடையினம், ய்,ர்,ல்,வ்,ழ்,ள்**
12. உயிர்மெய் எழுத்துகள் மொத்தம் .................. **விடை: இருநூற்றுப் பதினாறு**
13. ஆய்த எழுத்துக்கான மாத்திரை .................. **விடை: அரை**
14. ஆய்த எழுத்து ........... **விடை: ஃ**

### குறுவினா

**1. இலக்கணம் என்றால் என்ன?**

➢ உலகில் உள்ள ஒவ்வொரு பொருளையும் மனிதன் உற்று நோக்கினான். அவற்றின் இயல்புகளை அறிந்துகொண்டான் இவ்வாறே மொழியையும் ஆழ்ந்து கவனித்தான்.

➢ மொழியை எவ்வாறு பேசவும், எழுதவும் வேண்டும் என்பதை வரையறை செய்தான். அந்த வரையறைகளே இலக்கணம் எனப்படும்.

**2. எழுத்து என்றால் என்ன?**

ஒலி வடிவமாக எழுப்பப்படுவதும், வரிவடிவமாக எழுதப்படுவதும் எழுத்து எனப்படுகிறது.

**3. உயிர் எழுத்துகள் என்றால் என்ன?**

உயிருக்கு முதன்மையானது காற்று. காற்றைப் பயன்படுத்தி வாயைத் திறத்தல், உதடுகளை விரித்தல், குவித்தல் ஆகிய எளிய செயல்பாடுகளினால் வெளிப்படும் ‘அ’ முதல் ‘ஔ’ வரை உள்ள எழுத்துகள் உயிர் எழுத்துகள் எனப்படும்.

**4. உயிர் எழுத்துகள் எத்தனை? அவற்றை எடுத்து எழுதுக.**

உயிர் எழுத்துகள் பன்னிரண்டு. அவை – அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ ஆகும்.

**5. குறில் எழுத்துகள் என்றால் என்ன?**

குறுகி ஒலிக்கும் எழுத்துகள் குறில் எழுத்துகள் எனப்படும்.

**6. நெடில் எழுத்துகள் என்றால் என்ன?**

நீண்டு ஒலிக்கும் எழுத்துகள் நெடில் எழுத்துகள் எனப்படும்.

**7. உயிர்க் குறில் எழுத்துகளை எழுதுக.**

அ, இ, உ, எ, ஒ என ஐந்து எழுத்துகளும் உயிர்க்குறில் எழுத்துகளாகும்.

**8. உயிர் நெடில் எழுத்துகள் யாது?**

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என ஏழு எழுத்துகளும் உயிர் நெடில் எழுத்துகளாகும்.

**9. மெய் எழுத்துகள் என்றால் என்ன? அவை யாவை?**

➢ மெய் என்பது உடம்பு எனப் பொருள்படும். மெய் எழுத்துகளை ஒலிக்க உடல் இயக்கத்தின் பங்கு இன்றியமையாதது.

➢ க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் ஆகிய பதினெட்டும் மெய்யெழுத்துகள் ஆகும்.

**10. வல்லினம் என்றால் என்ன? அவை யாவை?**

வன்மையாக ஒலிக்கும் எழுத்துகள் வல்லினம் எனப்படும்.

அவை – க், ச், ட், த், ப், ற்

**11. மெல்லினம் என்றால் என்ன? அவை யாவை?**

மென்மையாக ஒலிக்கும் எழுத்துகள் மெல்லினம் எனப்படும்.
அவை – ங், ஞ், ண், ந், ம், ன்

**12. இடையினம் என்றால் என்ன? அவை யாவை?**

வன்மையாகவும் இல்லாமல் மென்மையாகவும் இல்லாமல் இரண்டிற்கும் இடைப்பட்டு ஒலிக்கின்ற எழுத்துகள் இடையினம் எனப்படும்.

அவை – ய், ர், ல், வ், ழ், ள்

SURA'S

**13. மாத்திரை என்பது யாது?**

மாத்திரை என்பது கால அளவைக் குறிக்கிறது. ஒரு மாத்திரை என்பது ஒருமுறை கண் இமைக்கவோ, ஒருமுறை கை நொடிக்கவோ ஆகும் கால அளவு ஆகும்.

## மொழியை ஆள்வோம்

### கீழ்க்காணும் தலைப்புகளில் ஒரு நிமிடம் பேசுக

1. தமிழ் இனிது 2. தமிழ் எளிது 3. தமிழ் புதிது

**1. தமிழ் இனிது :**

அனைவருக்கும் வணக்கம்! நம் தாய்மொழியாம் தமிழின் இனிமை, எளிமை, புதுமை பற்றிப் பார்ப்போமா? நம் தாய்மொழியாம் தமிழை உயர்தனிச் செம்மொழி என்று பெயரிட்டபோதே அதன் சிறப்புகளை அனைவரும் அறிவர். இது தனித்து இயங்கும் மொழி, செம்மையான மொழி எனச் சிறப்பிக்கலாம்.

தமிழ் என்றால் அழகு, தமிழ் என்றால் இனிமை. அதனால்தான் இதனைத் தேன்தமிழ், தீந்தமிழ் முதலான சொற்களால் அழைக்கின்றனர். தமிழ் என்ற சொல்லைத் 'தம்–இழ்' எனப் பிரித்தால் தம்மிடத்தில் 'ழ்' ழைக் கொண்ட மொழி எனப் பொருள் கொள்ளலாம். தமிழில் மூன்று இனங்கள் உண்டு. அவை முறையே வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகும்.

"தேனொக்கும் தமிழே! நீ கனி, நான்கிளி
வேறென்ன வேண்டும் இனி?"
"செந்தமிழ் நாடெனும் போதினிலே
இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே!"
இப்பாடல் வரிகள் தமிழின் இனிமையைப் பறைசாற்றும்.

**2. தமிழ் எளிது :**

தமிழ் இனிய தமிழ் என்பதோடு எளிய தமிழ் எனவும் கூறப்படுகிறது. தமிழ் மொழியானது பேசவும் படிக்கவும் மிகவும் எளிதானது. இந்தச் சிறப்பு உலகில் எந்த மொழிக்கும் இல்லாதது. உயிரும் மெய்யும் இணைவதால் தோன்றுபவை உயிர்மெய் ஒலிகள். உயிர் எழுத்துகள், மெய்யெழுத்துகள் ஆகியவற்றின் ஒலிப்பு முறைகளை அறிந்து கொண்டால் போதும்.

எழுத்துகளைக் கூட்டி ஒலித்தாலே தமிழ் படித்தல் இயல்பாக நிகழும். தமிழ்மொழியை எழுதும் முறையும் எளிதானது. தமிழ் எழுத்துகள் பெரும்பாலும் வலஞ்சுழி எழுத்துகளாகவே அமைந்துள்ளன. தமிழ் எழுத்துகள் மேல் உதடு, கீழ் உதடு, மேற்பல், கீழ்ப்பல், நுனிநாக்கு, அடிநாக்கு, நடுநாக்கு இவற்றின் முயற்சியால் மட்டுமே ஒலிப்பதாக இருக்கும். தமிழ் மிகவும் மென்மையாக ஒலிக்கக்கூடிய 'மெல்லோசை' மொழியாகவே உள்ளதால் எழுதவும் பேசவும் படிக்கவும் எளிமையாக உள்ளது.

SURA'S

**3. தமிழ் புதிது :**

தமிழ் மொழி என்றென்றும் புதிதாக உள்ளது. அதற்குக் காரணம் இன்று வளர்ந்து வரும் அறிவியல், கணினி ஆகிய தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்பத் தமிழில் புதிய கலைச் சொற்கள் உருவாகிக் கொண்டே உள்ளன. அறிவியல் தமிழ், கணினித் தமிழ் என்று சொல்லும் அளவிற்கு அவற்றின் கலைச் சொற்கள் பெருகியுள்ளன.

சமூக ஊடகங்களான செய்தித்தாள், தொலைக்காட்சி ஆகியவற்றிலும் பயன்படத்தக்க மொழியாகவும் தமிழ்மொழி விளங்குகிறது. இதிலிருந்து தமிழ் இனிது, எளிது, புதிது என்பதை அறியலாம்.

## கடிதம் எழுதுக

### விடுப்பு விண்ணப்பம்

அனுப்புநர் ※

அ.பூங்கோதை
ஆறாம் வகுப்பு 'அ' பிரிவு,
அரசினர் உயர்நிலைப் பள்ளி
அண்ணாநகர், சென்னை-40.

பெறுநர்

வகுப்பாசிரியர் அவர்கள்
ஆறாம் வகுப்பு 'அ' பிரிவு,
அரசினர் உயர்நிலைப் பள்ளி
அண்ணாநகர், சென்னை-40.

மதிப்பிற்குரிய ஐயா/ அம்மா,

வணக்கம், எனக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தால் இரண்டு நாள்கள் 19.06.20XX மற்றும் 20.06.20XX விடுப்பு அளிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி,

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள மாணவி,
அ.பூங்கோதை.

இடம் : முகப்பேர்
நாள் : 18.06.20XX
பெற்றோர் கையொப்பம்
அருணாச்சலம்.

SURA'S

## கடிதம் எழுதுக

### அறிந்து பயன்படுத்துவோம்

**கடிதம்**

ஒருவர் மற்றொருவருக்குத் தெரிவிக்க விரும்பும் செய்தியை எழுதிக் கையெழுத்திட்டு அனுப்புவது கடிதம் எனப்படுகிறது. கடிதம் இரண்டு வகைப்படும். அவை உறவுமுறைக் கடிதம், அலுவலகக் கடிதம் என்பவையாகும்.

அலுவலகக் கடிதம் என்பது பல்வேறு அலுவல் சார்ந்து, தனிநபர் அல்லது ஒரு குழு உரிய அலுவலர்களுக்கு எழுதுவது ஆகும்.

**அலுவலகக் கடிதம் எழுதும் முறை**

அலுவலகக் கடிதத்தில் அனுப்புநர் முகவரி, பெறுநர் முகவரி, விளித்தல், பொருள், உடற்பகுதி, கையொப்பம், இடம், நாள், உறைமேல் முகவரி ஆகியவை இடம்பெறுதல் வேண்டும்.

**உங்கள் பகுதியில் பழுது அடைந்துள்ள தெருவிளக்குகளைச் சரிசெய்ய வேண்டி, உதவி மின்பொறியாளருக்கு விண்ணப்பம்.**

அனுப்புநர்

ந. தேன்மொழி,
எண் 5, வேடன் வயல்,
கூடலூர், நீலகிரி மாவட்டம் - 643 212.

பெறுநர்

உதவி மின் பொறியாளர்,
மின் பொறியாளர் அலுவலகம்,
கூடலூர், நீலகிரி மாவட்டம் - 643 212.

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : பழுது அடைந்துள்ள தெருவிளக்குகளைச் சரிசெய்ய வேண்டுதல் - சார்பு.

வணக்கம். எங்கள் பகுதியில் சுமார் 200 குடும்பத்தினர் வசித்து வருகிறோம். இங்குள்ள தெருவிளக்குகள் மழை காரணமாகக் கடந்த ஒரு வாரமாக எரியவில்லை. இதனால், இரவு நேரத்தில் வெளியில் செல்வது மிகவும் கடினமாக உள்ளது. எனவே, பழுது அடைந்துள்ள தெருவிளக்குகளை மாற்றி, புதிய விளக்குகள் அமைத்துத் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி.

**நாள் :** 25.06.2025
**இடம்:** கூடலூர்

தங்கள் உண்மையுள்ள,
ந. தேன்மொழி.

**உறைமேல் முகவரி**

உதவி மின் பொ ழறியாளர்,
மின் பொறியாளர் அலுவலகம்,
கூடலூர், நீலகிரி மாவட்டம் - 643 212.

அஞ்சல் தலை

SURA'S



# மொழியோடு விளையாடு

## திரட்டுக

‘மை’ என்னும் எழுத்தில் முடியும் சொற்களின் பட்டியல் தயாரிக்க.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | கருமை | 6 | சிறுமை | 11 | அருமை |
| 2 | இனிமை | 7 | கல்லாமை | 12 | உண்மை |
| 3 | பொறுமை | 8 | வறுமை | 13 | இல்லாமை |
| 4 | பெருமை | 9 | தனிமை | 14 | பன்மை |
| 5 | இளமை | 10 | உவமை | 15 | வாய்மை |

## கீழ்க்காணும் சொற்களில் உள்ள எழுத்துகளைக் கொண்டு புதிய சொற்களை உருவாக்குக.

(எ.கா.) கரும்பு - கரு, கம்பு.
கவிதை - கவி, விதை, கதை, தை.
பதிற்றுப்பத்து - பதி, பத்து, பற்று, பத்தி, பறு.
பரிபாடல் - பரி, பாடல், பா, பால், பாரி.

## இரண்டு சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.

நூல் மொழி கோல் மீன் நீதி எழுது
கண் வெளி தமிழ் மணி மாலை விண்

(எ.கா) விண்மீன்

| | | | |
|---|---|---|---|
| 1 | நூல்வெளி | 7 | தமிழ்மணி |
| 2 | மொழிநூல் | 8 | விண்மீன் |
| 3 | தமிழ்மொழி | 9 | தமிழ்மாலை |
| 4 | எழுதுகோல் | 10 | தமிழ்நூல் |
| 5 | கண்மணி | 11 | விண்வெளி |
| 6 | நீதிநூல் | 12 | மணிமாலை |

## பொருத்தமான சொற்களைக் கொண்டு தொடர்களை நிரப்புக

(அழகு, ஏற்றம், இன்பம், ஊக்கம், இனிமை, ஆற்றல், ஈடு, இசை, உணர்வு, ஏடுகள், உரிமை, என்றும், எளிதாய், உவகை, அன்பு)

அ - ________ தருவது தமிழ் ஆ - ________ தருவது தமிழ்
இ - ________ தருவது தமிழ் ஈ - ________ இல்லாதது தமிழ்
உ - ________ தருவது தமிழ் ஊ - ________ தருவது தமிழ்
எ - ________ வேண்டும் தமிழ் ஏ - ________ தருவது தமிழ்

SURA'S

**அன்பு** தருவது தமிழ்
**ஆற்றல்** தருவது தமிழ்
**இன்பம்** தருவது தமிழ்
**ஈடு** இல்லாதது தமிழ்
**உவகை** தருவது தமிழ்
**ஊக்கம்** தருவது தமிழ்
**என்றும்** வேண்டும் தமிழ்
**ஏற்றம்** தருவது தமிழ்

## நிற்க அதற்குத் தக

### என் பொறுப்புகள்...

1. நான் தாய்மொழியிலேயே பேசுவேன்.
2. தாய்மொழியிலேயே கல்வி கற்பேன்.
3. தமிழ்ப்பெயர்களையே சூட்டுவேன்.

## படிப்போம்; பயன்படுத்துவோம்!

| | | | |
|---|---|---|---|
| வலஞ்சுழி | - Clockwise | இடஞ்சுழி | - Anti Clockwise |
| இணையம் | - Internet | குரல்தேடல் | - Voice Search |
| தேடுபொறி | - Search engine | தொடுதிரை | - Touch Screen |
| செயலி | - App | மின்னஞ்சல் | - E-mail |

SURA'S

# அலகுத்தேர்வு - 1

**நேரம் : 60 நிமிடம்** **மதிப்பெண்கள் : 25**

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (3 × 1 = 3)

1. நாள் முழுவதும் வேலை செய்து களைத்தவருக்கு .................... ஆக இருக்கும்.
   அ) மகிழ்ச்சி ஆ) கோபம்
   இ) வருத்தம் ஈ) அசதி
2. 'செந்தமிழ்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது...............
   அ) செந் + தமிழ் ஆ) செம் + தமிழ்
   இ) சென்மை + தமிழ் ஈ) செம்மை + தமிழ்
3. 'மா' என்னும் சொல்லின் பொருள் ....................
   அ) மாடம் ஆ) வானம்
   இ) விலங்கு ஈ) அம்மா

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக. (3 × 1 = 3)

4. நாம் சிந்திக்கவும் சிந்தித்ததை வெளிப்படுத்தவும் உதவுவது .................. .
5. இரண்டு மாத்திரை அளவுள்ள ஓரெழுத்துச்சொல் .............. .
6. ஏற்றத் தாழ்வற்ற ............. அமையவேண்டும்.

## III. பொருத்துக. (4 × ½ = 2)

7. விளைவுக்கு - பால்
8. அறிவுக்கு - வேல்
9. இளமைக்கு - நீர்
10. புலவர்க்கு - தோள்

## IV. வாக்கியத்தில் அமைத்து எழுதுக. (2 × ½ = 1)

11. நாள்தோறும் -
12. தனிச்சிறப்பு -

## V. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்கவும். (3 × 2 = 6)

13. பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்கள் யாவை?
14. தமிழ் ஏன் மூத்தமொழி என்று அழைக்கப்படுகிறது?
15. நீங்கள் அறிந்த தமிழ்க் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.
16. 'மாத்திரை' என்பது யாது?

## VI. பின்வரும் வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஆறு வரிகளில் விடையளிக்கவும். (2 × 3 = 6)

17. 'இன்பத் தமிழ்' - பாடலில் உங்களுக்குப் பிடித்த அடிகள் இரண்டனை எழுதுக.
18. அஃறிணை, பாகற்காய் என்னும் சொற்களின் பொருள் சிறப்பு யாது?
19. தமிழ் இனிய மொழி என்பதற்கான காரணம் தருக.

## VII. அடிமாறாமல் எழுதுக. (2 + 2 = 4)

20. 'இன்பத் தமிழ்' பாடலைச் செய்யுள் வடிவில் எழுதுக.

☆☆☆

SURA'S